தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## நவரைப் பட்ட நெல் சாகுபடிக்கு வேளாண்துறை ஆலோசனை

First Published : 04 Mar 2010 02:41:25 AM IST

கடலூர்,மார்ச் 3: நவரைப் பட்ட நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு கீழ்காணும் ஆலோசனைகளை கடலூர் மாவட்ட வேளாண்துறை புதன்கிழமை அறிவித்தது.

இதுதொடர்பாக வேளாண் இணை இயக்குநர் ச.இளங்கோவன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் நவரைப்பட்ட நெல் உற்பத்தியைப் பெருக்கும் வகையில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் மானிய விலையில் சிங்க் சல்பேட் உரம் விவசாயிகளுக்கு வேளாண் துறைமூலம் வழங்கப்படுகிறது. நவரைப் பட்ட நெல் பயிருக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 25 கிலோ சிங்க் சல்பேட் உரத்துடன், 50 கிலோ மணல் கலந்து, நன்கு சமப்படுத்தப்பட்ட வயலில், நாற்று நடுமுன் ஒரே சீராக இடவேண்டும். நவரைப் பட்ட நெல் சாகுபடி விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்துறை அலுவலர்களை அணுகி சிங்க் சல்பேட் உரத்தை மானிய விலையில் பெற்று பயன் அடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்றும் செய்தி குறிப்பு தெரிவிக்கிறது.

## திருவாரூரில் அயோடின் இல்லாத 2,410 கிலோ உப்பு பறிமுதல்

First Published : 04 Mar 2010 07:27:10 AM IST

திருவாரூர், மார்ச் 3: திருவாரூர் நகரில் அயோடின் சத்து இல்லாமல் விற்பனைக்கு கடைகளில் வைக்கப்பட்டிருந்த 2,410 கிலோ உப்பை நகராட்சி அலுவலர்கள் புதன்கிழமை பறிமுதல் செய்து அழித்தனர். (படம்)

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் நகராட்சி ஆணையர் க. சரவணன், சுகாதார அலுவலர் எஸ். ராஜா, உணவு ஆய்வாளர் க. மணாழகன், சுகாதார ஆய்வாளர்கள் வி. பழனிசாமி, ஆர். பாலமுருகன், வி. அருள்தாஸ் ஆகியோர் கொண்ட குழுவினர் 28 மளிகை மற்றும் சிறு வணிகக் கடைகளில் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

சோதனையில் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த உப்பு மாதிரிகளை எடுத்து, எளிய முறை சோதனை மூலம் அயோடின் சத்து உள்ளதா என்பதை அலுவலர்கள் கண்டறிந்தனர். இதில் அயோடின் சத்து இல்லாத 2,410 கிலோ உப்பு பறிமுதல் செய்யப்பட்டு, நகராட்சி குப்பைக் கிடங்களில் கொட்டி அழிக்கப்பட்டது.

இதுகுறித்து ஆணையர் க. சரவணன் கூறியது:

அயோடின் சத்து இல்லாத உப்பு விற்பனை செய்ய அரசு தடை விதித்துள்ளது. அயோடின் சத்துப் பற்றாக்குறையால் கருச்சிதைவு, குறைப் பிரசவம், பிறவி ஊனம், சிசு மரணம், குழந்தைகளுக்கு முன்கழுத்துக் கழலை, போதிய வளர்ச்சியின்மை உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படும்.

அயோடின் சத்து உப்பின் மூலம் நமது உடலில் சேர்ந்து விடுகிறது. உப்பில் அயோடின் சத்து இல்லாத பட்சத்தில், இந்தச் சத்து நம் உடலுக்குக் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. எனவே, பொதுமக்கள் அயோடின் சத்து உள்ள உப்பை மட்டுமே வாங்கி உபயோகிக்க வேண்டும். வியாபாரிகள் அயோடின் சத்து இல்லாத உப்பை விற்பனை செய்தால், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.1 லட்சம் வரைமானிய கடன்**

First Published : 04 Mar 2010 02:29:58 AM IST

காஞ்சிபுரம், மார்ச் 3 : காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்பைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்பாசன வசதி அமைக்க மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சந்தோஷ் கே. மிஸ்ரா வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இவர்களுக்கு அதிகபட்சமாக ரூ.1 லட்சம் வரை மானிய கடன் வழங்கப்பட உள்ளது. இக் கடனில் ரூ.50 ஆயிரம் வரை மானியமாக வழங்கப்படும். இத் திட்டம் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

மேலும், நிலத்தின் நீர் ஆதாரத் தன்மைக்கு பொதுப்பணித் துறையின் நிலத்தடி நீர் பிரிவு அல்லது பிற அரசு சார்ந்த நிறுவனங்களின் தொழில்நுட்பச் சான்றிதழை பெற்று விண்ணப்பதாரர் விண்ணப்பிக்க வேண்டும்.

நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தப்பட்ட இனங்களில் பயனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின்வாரியத்தால் இலவச மின் இணைப்பு வழங்கப்படும். ரூ.50 ஆயிரம் வரையிலான கடன் தொகைக்கு பம்பு செட்டுகளையும், நிலத்தில் உள்ள விளைப்பொருள்களையும் அடமானம் பெற்று வங்கிக் கடன் வழங்கப்படும்.

ரூ.50 ஆயிரத்துக்கு அதிகப்படியான கடன் தொகைக்கு வங்கியின் விதிகளின்படி பிணையம் பெற்று கடன் வழங்கப்படும். இத் திட்டத்தில் காஞ்சிபுரம், காட்டாங்குளத்தூர், குன்றத்தூர், மதுராந்தகம், திருப்பெரும்புதூர், வாலாஜாபாத், அச்சிறுபாக்கம், தாமஸ் மலை, திருப்போரூர் உள்ளிட்ட ஒன்றியங்களில் இருந்து மட்டுமே கடன் மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்ட ஒன்றியமாகக் கருத்தப்படும் சித்தாமூர், திருக்கழுகுன்றம், லத்தூர், உத்திரமேரூர் ஆகிய ஒன்றியங்களில் கடன் வழங்க இயலாது. மேலும், விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை நேரிலோ அல்லது 044- 27236588 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**நாகை, திருவாரூர் மாவட்ட விவசாய பணிகளுக்கு சுழற்சி முறை மின் விநியோகம்**

First Published : 04 Mar 2010 07:26:39 AM IST

நாகப்பட்டினம், மார்ச் 3: நாகை, திருவாரூர் மாவட்டங்களில் விவசாய மின் இணைப்புகளுக்குச் சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்படும் என நாகை மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் வை. நடராஜன் தெரிவித்துள்ளார்.

அவரது செய்திக் குறிப்பு: நாகை மின் பகிர்மான வட்டத்துக்குள்பட்ட நாகை,திருவாரூர் மாவட்டங்களில் உள்ள விவசாய மின் இணைப்புகளுக்கு மார்ச் 1-ம் தேதி முதல் பகலில் 6 மணி நேரமும், இரவில் 4 மணி நேரமும் சுழற்சி முறையில் மும்முனை மின்சாரம் வழங்கப்படும். தினமும் 3 மணி நேரம் மின் நிறுத்தம் செய்யப்படும். மற்ற நேரங்களில் இருமுனை மின்சாரம் வழங்கப்படும்.

**பண்ணைப் பள்ளி பயிற்சி**

First Published : 04 Mar 2010 04:25:55 AM IST

திருவாடானை, மார்ச் 3: திருவாடானை தாலுகா ஆர்.எஸ்.மங்கலம் அருகே தும்படாகோட்டை கிராமத்தில் ஆத்மா திட்ட பண்ணைப் பள்ளி பயிற்சி முகாம் நடைபெற்றது.

தும்படாகோட்டை கிராமத்தில் ஆத்மா திட்ட பண்ணைப் பள்ளி மூலம் செம்மை நெல் சாகுபடி, நோய்கள் கண்டறிதல், நோய்களைக் கட்டுபடுத்துதல் ஆகியன குறித்து

25 விவசாயிகளுக்கு 6 வார காலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சிபெற்ற விவசாயிகளுக்கு பூச்சிகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றை கண்டறிவதற்கான லென்ஸ், தொப்பி, கண்ணாடி கிளாஸ் போன்ற 5 வகையான உபகரணங்கள் வழங்கபட்டன.

முகாமில் வேளாண் இணை இயக்குனர் சக்திமோகன், ஆர்.எஸ். மங்கலம் வேளாண் உதவி இயக்குநர் முகம்மது அப்துல் நசீர் மற்றும் வேளாண் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் சங்க மாநாடு**

First Published : 04 Mar 2010 05:11:38 AM IST

உடுமலை, மார்ச் 3: தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் உடுமலை வட்டாரக் கிளை மாநாடு திங்கள்கிழமை நடை பெற்றது. எஸ்.அமரலிங்கம் தலைமை வகித்தார். இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம்:

÷தமிழ்நாடு வனவிலங்கு பட்டியலில் இருந்து பன்றிகளை நீக்க வேண்டும். விவசாய விளைபொருட்களை உலர்த்த அமைக்கப்பட்டுள்ள உலர் களங்களில் பணம் வசூலிக்க தடை விதிக்க வேண்டும். தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் உள்ள உறுப்பினர்களை விவசாயப் பணிகளுக்கு பயன்படுத்தும் வகையில் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நறைவேற்றப்பட்டன. மாநாட்டில் புதிய கௌரவத் தலைவராக என்.ஆர்.பழனிசாமியுடன், 9 பேர் கொண்ட வட்டார கமிட்டியும் அமைக்கப்பட்டது.

**கதிர் அறுக்க இயந்திரமின்மையால் விவசாயிகள் கவலை**

First Published : 04 Mar 2010 04:53:07 AM IST

மேலூர், மார்ச் 3: மேலூர் உள்ளிட்ட ஒருபோகச் சாகுபடிப் பகுதிகளில் நெல் அறுவடைக்குப் போதிய கதிர் அறுவடை இயந்திரங்கள் இன்மையாலும், நெல் விலை குறைவாலும் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

இதுகுறித்து மேலூர் பகுதி விவசாயிகள் கூறியதாவது:

ஒருபோகச் சாகுபடிப் பகுதியில் இந்த ஆண்டு நெல் விளையும் தருணத்தில் கடைமடைப் பகுதியில் சில இடங்களில் ஒருமுறை தண்ணீர் இன்றி நெல் பயிர் பாதிப்புக்கு உள்ளாகிவிட்டது. கால்வாய்களில் ஆரம்பப் பகுதியில் நல்ல விளைச்சல் அடைந்துள்ளது. விவசாயப் பணிகளுக்கு ஆள் கிடைப்பது மிக அரிதாக உள்ளது.

ஓர் ஏக்கருக்கு சராசரியாக 66 கிலோ எடையுள்ள 30 மூட்டை வரை நெல் கிடைத்துள்ளது. ஆனால், ஓர் ஏக்கர் நெல் சாகுபடிசெய்து கதிர் அறுவடை வரை குறைந்தபட்சம் ரூ.15,000 வரை செலவாகி உள்ளது.

அரசு கொள்முதல் நிலையங்களில் கிலோ நெல்லுக்கு ரூ.11 வழங்குகின்றனர். ஆனால், சாகுபடி தொடங்கும்போதே தனியார் நெல் வியாபாரிகளிடம் விவசாயிகள் கடன்வாங்கி விவசாயம் செய்வதால், பெரும்பாலானோர் தனியார் வியாபாரிகளிடமே நெல்லை விற்பனை செய்கின்றனர்.

## கதிர் அறுக்க இயந்திரமின்மையால் விவசாயிகள் கவலை

First Published : 04 Mar 2010 04:53:07 AM IST

மேலூர், மார்ச் 3: மேலூர் உள்ளிட்ட ஒருபோகச் சாகுபடிப் பகுதிகளில் நெல் அறுவடைக்குப் போதிய கதிர் அறுவடை இயந்திரங்கள் இன்மையாலும், நெல் விலை குறைவாலும் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.
இதுகுறித்து மேலூர் பகுதி விவசாயிகள் கூறியதாவது:
ஒருபோகச் சாகுபடிப் பகுதியில் இந்த ஆண்டு நெல் விளையும் தருணத்தில் கடைமடைப் பகுதியில் சில இடங்களில் ஒருமுறை தண்ணீர் இன்றி நெல் பயிர் பாதிப்புக்கு உள்ளாகிவிட்டது. கால்வாய்களில் ஆரம்பப் பகுதியில் நல்ல விளைச்சல் அடைந்துள்ளது. விவசாயப் பணிகளுக்கு ஆள் கிடைப்பது மிக அரிதாக உள்ளது.
ஓர் ஏக்கருக்கு சராசரியாக 66 கிலோ எடையுள்ள 30 மூட்டை வரை நெல் கிடைத்துள்ளது. ஆனால், ஓர் ஏக்கர் நெல் சாகுபடிசெய்து கதிர் அறுவடை வரை குறைந்தபட்சம் ரூ.15,000 வரை செலவாகி உள்ளது.
அரசு கொள்முதல் நிலையங்களில் கிலோ நெல்லுக்கு ரூ.11 வழங்குகின்றனர். ஆனால், சாகுபடி தொடங்கும்போதே தனியார் நெல் வியாபாரிகளிடம் விவசாயிகள் கடன்வாங்கி விவசாயம் செய்வதால், பெரும்பாலானோர் தனியார் வியாபாரிகளிடமே நெல்லை விற்பனை செய்கின்றனர்.

## விலை குறைவால் நெல் வரத்து இல்லாத அரசு கொள்முதல் நிலையங்கள்

First Published : 04 Mar 2010 07:18:34 AM IST

கரூர், மார்ச் 3: விலை குறைவால் அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் போதுமான அளவிற்கு நெல் வரத்து இல்லை.
கரூர் மாவட்டத்தில் சுமார் 2 லட்சம் ஏக்கர் பரப்பளவு பகுதிகள் காவிரி, அமாரவதி நதிகள் மூலமாகவும், நீரேற்று பாசனம் மற்றும் கிணற்றுப் பாசனம் மூலமாகவும் விவசாயம் செய்யப்படுகிறது.
தற்போது நடைபெற்று வரும் சம்பாப் பருவத்தில் 15,263 ஹெக்டேர் பரப்பளவில் நெல் நடவு செய்யப்பட்டு அறுவடைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அறுவடை செய்யப்படும் நெல்லை கொள்முதல் செய்வதற்காக மாவட்டத்தில், குளித்தலை, நங்கவரம், நச்சலூர், பணிக்கம்பட்டி, லாலாப்பேட்டை, கோவகுளம், சிவாயம், கரூர் பகுதிகளில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நெல் கொள்முதல் நிலையங்களில் "ஏ' கிரேடு நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,100-ம், "சி' கிரேடு நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,050-ம், நெல்லின் ஈரப்பதம் 17 சதம் வரை இருக்கலாம் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
நெல் அறுவடைப் பணிகள் தொடங்கி ஒரு மாதமாகியும் அரசு கொள்முதல் நிலையத்தில் நெல்லை விற்பனை செய்வதற்கு விவசாயிகள் போதிய ஆர்வம் காட்டவில்லை. இதனால், கரூர் மாவட்டத்திலுள்ள 8 கொள்முதல் நிலையங்களிலும் இதுவரை 344 மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஜி.ஆர்.சுப்பிரமணியன் கூறியது:
2009-10 ஆம் ஆண்டு காரீப் பருவத்தில் நெல் கொள்முதல் செய்ய 8 நேரடி கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், இதுவரை 344 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நங்கவரத்தில் 163 மெட்ரிக் டன்னும், நச்சலூரில் 49 மெட்ரிக் டன்னும், கோவகுளத்தில் 132 மெட்ரிக் டன்னும் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மற்ற நிலையங்களில் நெல் வரத்து இல்லை. கடந்த 2004-05 காரீப் பருவத்தில் 558 மெ.டன்னும், 2005-06-ல் 303 மெட்ரிக் டன்னும், 2006-07ல் 231 மெட்ரிக் டன்னும், 2007-08-ல் 275 மெட்ரிக் டன்னும், 2008-09-ல் அதிகபட்சமாக 976 மெட்ரிக் டன்னும் கொள்முதல் செய்யப்பட்டது.

பெரும்பாலான பகுதிகளில் தற்போது அறுவடைப் பணிகள் நிறைவு பெற்றுவிட்டதால் இனி நெல் வரத்து இருக்காது என்றே தெரிகிறது என்றார் அவர்.

கரூர் மாவட்டத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ள 15,263 ஹெக்டேரில் சுமார் 5,200 ஹெக்டேர் பரப்பளவு செம்மை நெல் சாகுபடி முறையில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. எனவே, ஒரு ஹெக்டேருக்கு குறைந்தபட்சமாக 5 ஆயிரம் கிலோ நெல் அறுவடை செய்யப்படும். இதன்படி 76,315 மெட்ரிக் டன் நெல் உற்பத்தியாகிறது. இதுவரை 12,700 ஹெக்டேர் நிலப்பரப்பில் அறுவடைப் பணிகள் முடிந்த போதிலும், அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு 344 மெட்ரிக் டன் மட்டுமே வந்துள்ளது. குறைவான நெல் வரத்திற்கு அரசின் கொள்முதல் விலை குறைவே முக்கியக் காரணம் என்கின்றனர் விவசாயிகள்.

விவசாயிகளிடமிருந்து "ஏ' கிரேடு ரகத்தில் பொன்னி உள்ளிட்ட உயர் ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,200 முதல் ரூ.1,500 வரையும், "சி' கிரேடு ரகமான ஐஆர் 20, ஐஆர் 50, குண்டு உள்ளிட்ட ரகங்களுக்கு ரூ.1,100 முதல் ரூ.1,300 வரையிலும் வழங்குகின்றனர். அரசின் கொள்முதல் விலையைவிட வெளி வியாபாரிகள் வழங்கும் தொகை அதிகமாக இருப்பதோடு, நேரடியாக வயலுக்கே வந்து நெல்லை எடுத்துச் செல்கின்றனர். இதனால், அதிக வருமானம், குறைவான அலைச்சல் என்ற நோக்கத்தில் வியாபாரிகளுக்கே தங்களது நெல்லை விற்றுவிடுகின்றனர் விவசாயிகள்.

கடந்த ஆண்டு அரசின் கொள்முதல் விலையும், வியாபாரிகளின் கொள்முதல் விலையும் ஒரே அளவிற்கு இருந்தது தான் அதிகப்படியான நெல் கொள்முதலுக்கு காரணம் என்று வேளாண்மைத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே, வரும் காலங்களில் கட்டுப்படியாகும் விலையை அரசு நிர்ணயம் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 74.58 அடி

First Published : 04 Mar 2010 01:08:08 AM IST

சேலம், மார்ச் 3: மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 74.58 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,505 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 36.76 டி.எம்.சி.

## விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்புப் பயிற்சி

First Published : 04 Mar 2010 04:35:17 AM IST

வந்தவாசி, மார்ச் 3: வந்தவாசி வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி வந்தவாசியை அடுத்த அதியனூர் கிராமத்தில செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வந்தவாசி வேளாண்மை உதவி இயக்குநர் பி.செல்வராஜ் தலைமை வகித்து முகாமை தொடங்கி வைத்துப் பேசியது:

மண்புழு உரத்தினால் மண்ணில் அங்கக சத்துக்கள் அதிகரிப்பதுடன், பயிர்கள் நல்ல வளர்ச்சியடைந்து அதிக மகசூல் தருகின்றன. விவசாயிகள் ரசாயன உரங்களை மட்டும் அதிகம் பயன்படுத்தினால் மண்ணின் தன்மை மாறி உற்பத்தி திறன் குறைய வாய்ப்புள்ளது.

எனவே மண்ணின் தரம் மேம்படுவதற்கும், நல்ல மகசூல் மற்றும் தரமான தானிய வகைகளை உற்பத்தி செய்வதற்கும் மண்புழு உரமே சிறந்தது என்றார். வேளாண்மை அலுவலர் தே.குமரன், மண்புழு படுக்கை அமைக்கும் முறைகள் குறித்து செயல்விளக்கம் அளித்தார்.

## ரூ.40-க்கு துவரம்பருப்பு: ஆட்சியர் அறிவிப்பு

First Published : 04 Mar 2010 02:50:07 AM IST

விழுப்புரம், மார்ச் 3: வெளிச்சந்தையில் பொதுமக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பொருள்களின் விலையை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகளில் ரூ.40-க்கு துவரம் பருப்பு விநியோகிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் ஆர். பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

இதற்காக மார்ச் மாதத்துக்காக 649 மெட்ரிக் டன் துவரம்பருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை ரேஷன் கார்டுதாரர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## மணிலா விவசாயிகளுக்கு மானிய விலையில் ஜிப்சம்

First Published : 04 Mar 2010 04:16:37 AM IST



கடலூர், மார்ச் 3 : கடலூர் மாவட்டத்தில் மணிலா சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, மானிய விலையில் ஜிப்சம் வழங்கப்படுவதாக வேளாண் இணை இயக்குநர் ச. இளங்கோவன் அண்மையில் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மணிலாப் பயிருக்கு ஜிப்சம் இடுவது மிகவும் அவசியம். ஜிப்சத்தில் 24 சதவீதம் உள்ள சுண்ணாம்பு சத்து காய்கள் திரட்சியாகவும், அதிக உடைப்புத் திறன் உருவாகவும் உதவும். 12 சதவீதம் உள்ள கந்தகச் சத்து எண்ணெய் சதத்தை அதிகரிக்கும்.

ஹெக்டேருக்கு 200 கிலோ ஜிப்சம் அடியுரமாகவும், 45-ம் நாளில் 200 கிலோ ஜிப்சத்தை இரண்டாம் களை எடுக்கும் தருணத்தில் மேலுரமாகவும் இட்டு, செடிகளைச் சுற்றி, கொத்தி நன்கு மண் அணைக்க வேண்டும்.

செடிகளைச் சுற்றி ஜிப்சம் இடும்போது நிலத்தில் போதிய அளவு ஈரம் இருக்க வேண்டும். மண் அணைப்பதால் விழுதுகள் எளிதில் மண்ணில் இறங்குகிறது. இதனால் காய்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். மணிலா பயிரில் உற்பத்தியைப் பெருக்க ஐசோபோம் எண்ணெய் வித்துத் திட்டத்தில், வேளாண் துறைமூலம் விவசாயிகளுக்கு ஜிப்சம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தின் கீழ், ஒரு ஹெக்டேருக்குத் தேவையான 400 கிலோ ஜிப்சம், ரூ. 756-க்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது என்றார்.

**கடலூர் மாவட்டத்தில் இதுவரை 31,557 மெட்ரிக் டன் நெல் கொள்முதல்**

கடலூர்:கடலூர் மாவட்டத்தில் 115 கொள்முதல் நிலையங்கள் மூலம் இதுவரை 31ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய் யப்பட்டுள்ளது.இது குறித்து கலெக்டர் அலுவலக செய்திக்குறிப் பில் கூறியிருப்பதாவது:தமிழக அரசு உத்தரவுப்படி தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், விருத்தசாலம், திட்டக்குடி, கடலூர், குறிஞ்சிப்பாடி மற் றும் பண்ருட்டி வட்டங்களில் 115 கொள்முதல் நிலையங்கள் திறந்து நெல் கொள்முதல் செய்து வருகிறது.

கடந்த 27ம் தேதிவரை 31557 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட் டுள்ளது.விவசாயிகளின் நலன் கருதி, கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகள் எடுத்து வரும் நெல்லினை அன்றைய தினமே கொள் முதல் செய்வதற்கும் விவசாயிகள் சுத்தம் செய்து எடுத்து வரும் தரமான நெல்லாக இருப்பின் தூற்றிட தேவையில்லை என்றும் ஒரே ஊரில் ஒரு லோடுக்கு குறைவாக நெல் வைத்திருக்கும் விவசாயிகள் ஒன்று சேர்ந்து அது ஒரு லோடு இருக்குமேயானால் அது குறித்து அதன் விவரத்தினை 04144-238280 என்ற தொலைபேசி எண் ணிலோ அல்லது துணை மேலாளருக்கு 99940 83409 என்ற மொபைல் எண் ணிற்கு தொடர்பு கொண்டு தெரிவித்தால் அருகில் உள்ள கொள்முதல் நிலையத்தின் மூலம் உடன் கொள்முதல் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.கொள்முதலில் குறைபாடு இருப்பின் அதன் விவரத்தினை மேற்கண்ட தொலைபேசி எண்கறில் தெரிவித்தால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

**நாட்டுத்துவரை விளைச்சல் அமோகம்**

சிறுபாக்கம்:நாட்டுத்துவரையின் அமோக விளைச் சலால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள் ளனர்.சிறுபாக்கம் மற்றும் சுற்றுவட்டாரத்தை சேர்ந்த 40 கிராமங்களில் விவசாயிகள் மானாவாரி நிலங்களில் இயற்கை உரத்துடன் கடந்த டிசம்பர் மாதம் மல்லி பயிருடன் ஊடு பயிராக நாட்டு துவரையினை விளைவித்தனர்.தற்போது மல்லி பயிர் அறுவடை செய் தபின், நாட்டு துவரை பூத்துக்குலுங்கி அதிகளவு காய்ப் பிடிப்புடன் காணப்படுவதால் நல்ல விவசாயிகள் மகிழ்ச்சியுடன் உள் ளனர்.

**பயறு வகைகளில் கூடுதல் மகசூல் : டி.ஏ.பி., தெளிக்க பரிந்துரை**

கடலூர்:பயறு வகை பயிர்களில் டி.ஏ.பி., தெளிப்பதால் அதிகமான பூக்கள் உற்பத்தியாகி திரட்சியான மணிகளும், இதனால் 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கும்.இதுகுறித்து வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:கடலூர் மாவட்டத்தில் பயறு வகை பயிர்களில் உற்பத்தியை பெருக்குவதற்காக வேளாண் துறை மூலம் டி.ஏ.பி., உரம் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எக்டேர் ஒன்றுக்கு இருமுறை தெளிப்பு செய்ய தேவையான 25 கிலோ டி.ஏ.பி., 200 ரூபாய் மானிய விலையில் வழங்கப்படுகிறது.பயறு வகை பயிர்களில் டி.ஏ.பி., தெளிக்க எக்டேர் ஒன்றுக்கு 12.5 கிலோ டி.ஏ.பி., உரத்தை 25 லிட்டர் தண்ணீரில் முதல் நாளே கரைத்து ஊற வைக்க வேண்டும்.

மறுநாள் தெளிந்த கரைசலை மட்டும் எடுத்து வடிகட்டி இத்துடன் 6.25 லிட்டர் தண்ணீர் சேர்த்து மாலை நேரத்தில் கைத் தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.பயிர்கள் பூக்கும் நிலையில் விதைப்பு செய்த 25ம் நாள் ஒரு முறையும் பின்னர் 15 நாள் இடைவெளி விட்டு 2ம் முறையும் டி.ஏ.பி., தெளிக்க வேண்டும். பயறு வகை பயிர்களில் டி.ஏ.பி., தெளிப்பதால் அதிகமான பூக்கள் உற்பத்தியாகி திரட்சியான மணிகளும், இதனால் 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கும்.எனவே, பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் துறை அலுவலர்களை அணுகி வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டத்தை பயன்படுத்தி டி.ஏ.பி., உரத்தை வாங்கி பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### தக்காளி, வெங்காயம் கிலோ ஆறு ரூபாய்

திண்டுக்கல்:சில வாரங்களாக காய்கறிகளின் விலை வெகுவாக குறைந்து வருகிறது. திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில், தக்காளி கடந்த வாரத்தில் கிலோ 16 ரூபாய்க்கும், சின்னவெங்காயம் கிலோ 20 ரூபாய்க்கும் விற்றது. நேற்று இவற்றின் விலை கடுமையாக குறைந் தது. தக்காளி, சின்னவெங் காயம் கிலோ ஆறு ரூபாயாக இருந்தது. மேலும் முருங்கைக் காய், அவரைக்காய் விலையும் சரிந்துள்ளது. நேற் றைய நிலவரப்படி(ஒரு கிலோ) முருங்கைக்காய் 30, அவரைக்காய் 10, கத்தரி 20, உருளைக்கிழங்கு 16, பெல்லாரி வெங்காயம் 16, பீட்ரூட் 16, முள்ளங்கி 6, பாகற்காய் 16 ஆகிய விலைகளில் இருந்தன. ஆனால் பீன்ஸ் ரகங்கள் ஓரளவு அதிகரிக்கத் துவங்கியுள்ளன.பீன்ஸ் 24, பட்டர் பீன்ஸ் 70, சோயா பீன்ஸ் 60 ஆகவும் அதிகரித்துள்ளன.

### சிறிய வெங்காயம் அறுவடை தீவிரம்

டி.என்.பாளையம்: சிறிய வெங்காயம் அறுவடை தீவிரமாக துவங்கியுள்ளதால், விலை வெகுவாக சரிந்துள்ளது. ஈரோடு மாவட்டம் குண்டேரிப்பள்ளம், பெரும்பள்ளம் அணை பாசனப்பகுதியில் காய்கறி பயிர்கள் அதிகம் சாகுபடியாகின்றன. டி.என்.பாளையம், கொங்கர்பாளையம், பங்களாப்புதூர், வாணிப்புத்தூர் பகுதியில் 5,000 ஏக்கரில் சிறிய வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. குளிர்ந்த சீதோஷ்ண நிலையில் வெங்காயம் நன்கு வளரும். எனினும், ஃபிப்ரவரி முதல்வாரத்தில் இப்பகுதியில் திடீரென பரவிய நோய் தாக்குதலால் பல நூறு ஏக்கரில் வெங்காயம் கருகியது.

பெரும்பள்ளம் பாசனப்பகுதியில் தற்போது சிறிய வெங்காயம் அறுவடை வேகமாக துவங்கியுள்ளது. விவசாயக் கூலித்தொழிலாளர்கள் தேசிய வேலை உறுதி திட்டப்பணிகளுக்கு சென்று விடுவதால், அறுவடைப்பணிக்கு ஆள் கிடைக்காமல் விவசாயிகள் மிகவும் திண்டாடுகின்றனர். மாவட்டம் முழுவதும் கரும்பு, மஞ்சள் மற்றும் நெல் அறுவடைப் பணி தீவிரமாக துவங்கியுள்ள நிலையில், மிச்சம் மீதியுள்ள கூலித்தொழிலாளர்களும் அங்கு சென்றுவிட்டனர். எனவே, வெங்காயம் உள்பட காய்கறி பயிர்களை அறுவடை செய்ய ஆளின்றி தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஈரோட்டில் ஒரு மாதத்துக்கு முன்வரை கிலோ 25 ரூபாய்க்கு சிறிய வெங்காயம் விற்றது. தற்போது திருப்பூர் மாவட்டம் தாராபுரம், காங்கேயம், உடுமலைப்பேட்டை பகுதியிலும் தீவிர அறுவடை துவங்கியுள்ளதால், அங்கிருந்து ஈரோடு சந்தைக்கு சிறிய வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளது. இதுதவிர, டி.என்.பாளையம் பகுதியிலும் வெங்காயம் அறுவடை துவங்கியிருப்பது விலையை வெகுவாக குறைத்துள்ளது. விவசாயிகளிடம் கிலோ ஆறு ரூபாய்க்கு வாங்கி

வரும் வியாபாரிகள், சந்தையில் பத்து ரூபாய்க்கு விற்கின்றனர். வெங்காயம் வரத்து தொடர்ந்து அதிகரித்துள்ளதால், விலை மேலும் சரியும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

**நிலக்கடலை, எள் சாகுபடி அதிகரிப்பு**

கோபிசெட்டிபாளையம்: கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நடப்பாண்டு எண்ணெய் வித்து பயிர்களான நிலக்கடலை மற்றும் எள் ஆகியவை அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில் கடந்தாண்டு முதல் மற்றும் இரண்டாம்போக நெல் சாகுபடி முடிந்து அறுவடை பணி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பகுதிகளில் பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. கீழ்பவானி பாசனப் பகுதிகளில் மட்டும் மானாவாரி சாகுபடிக்காக தற்போது தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கீழ்பவானி பாசன பகுதிகளில் நிலக்கடலை மற்றும் எள் ஆகிய எண்ணை வித்து பயிர்கள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் நடப்பாண்டு நிலக்கடலை 2,500 ஏக்கரிலும், எள் ஆயிரம் ஏக்கரிலும் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிக்கு பவானிசாகர் அணையில் இருந்து வரும் ஏப்ரல் மாதம் 15ம் தேதிதான் தண்ணீர் திறந்து விடப்படும். இருந்தாலும் சில பகுதிகளில் குறுகிய கால பயிர்களான நிலக்கடலை மற்றும் எள் ஆகிய பயிர்கள் கிணற்று பாசனத்தை நம்பி பயிரிடப்பட்டுள்ளது. கோபி வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைதம்பி கூறுகையில், "" எண்ணெய் வித்து பயிர்களுக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மான்ய விலையில் ஜிப்சம் வழங்கப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு 400 கிலோ வழங்கப்படும். 750 ரூபாய் மான்யமாக வழங்கப்படும். கோபி, கூகலூர், வெள்ளாங்கோவில் வேளாண் விரிவாக்க மையங்களில் 100 டன் ஜிப்சம் தயார் நிலையில் விற்பனைக்காக உள்ளது," என்றார்.

**விவசாயிகள் கவலை சூரியகாந்தி உற்பத்தியோ இருமடங்கு விலை கடும் வீழ்ச்சியான பரிதாபம்**

கரூர்: குறைந்த முதலீட்டில், குறைவான தண்ணீர் தேவையுடன் 90 நாட்களில் மகசூல் காண முடியும் சூரியகாந்தி பயிர் சாகுபடிக்கு கரூரில் அமோக வரவேற்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் சாதனை பூர்வமாக இருமடங்கான சூரியகாந்திக்கு, ஏற்பட்டுள்ள கடும் விலைவீழ்ச்சி விவசாயிகளை கவலைக்கு உள்ளாக்கியுள்ளது. சமையல் தேவைக்கு கடலை எண்ணெய், பாமாயில், தேங்காய் எண்ணெய் என பயன்படுத்திய நிலைமாறி, பெரும்பான்மை மக்கள் சூரியகாந்தி எண்ணெய் பயன்படுத்த துவங்கியுள்ளனர். "கொழுப்பு' சத்து குறைவாக உள்ளதாக மருத்துவ ரீதியாக பரிந்துரைக்கப்படுவதால் இந்த எண்ணெய்க்கு மாறியவர்கள் சதவீதம் பல மடங்காக உயர்ந்துள்ளது.
இதனால் சூரியகாந்தி பயிர் செய்ய வாய்ப்புள்ள பிரதேசங்களில் விவசாயிகள் தற்போது சூரியகாந்தி பயிரிட துவங்கியுள்ளனர். வேளாண் துறையிலும் தேவையான விதை கையிருப்புடன் தகுந்த ஒத்துழைப்பு அளிக்கின்றனர்.

கரூர் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டு முன் இரண்டாயிரத்து 240 ஹெக்டேரில் பயிர் செய்யப்பட்ட சூரியகாந்தி பயிர், நடப்பு ஆண்டு ஃபிப்ரவரி வரை நான்காயிரத்து 800 ஹெக்டேர் பரப்பளவுக்கு விரிவானதுடன், உற்பத்தியிலும் சாதனை படைத்துள்ளது. குளித்தலை யூனியன் பகுதியில் மட்டுமே கடந்த காலங்களில் தொடர்ந்து பயிர் செய்யப்பட்ட சூரியகாந்தி, தற்போது மாவட்டத்தில் அனைத்து யூனியன்களிலும் பரவலாக ஒரே அளவில் பயிரிடப்படுகிறது. பயிர் சுழற்சிக்காகவும் பல இடங்களில் இவை சாகுபடி செய்யப்படுகிறது.

சூரியகாந்தி பயிர் ஏக்கருக்கு 600 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. அரசு வேளாண் துறை மூலம் நவீன ரகம் சூரியகாந்தி விதை அளிக்கப்படுகிறது. கே 1, கே 2, இ.சி.68415, பி.எஸ்.எச்.1, கோ 2, கோ 3, கோ 4 ஆகிய வகைகளும் பயன்பாட்டில் உள்ளன. அதே சமயம் தனியார் நிறுவனங்கள் ஒட்டு வகைகளாக புதிய ரகங்கள் டி.கே.3890, சன்மேக்ஸ், அருண், பயனீர் அட்வான்ஸ் மற்றும் காரிகில் ஆகியவற்றை மார்க்கெட்டில் அறிமுகப்படுத்தியுள்ளன. ஒட்டுவகையல்லாத சூரியகாந்தி விதையளவு ஏக்கருக்கு ஆறு கிலோ தேவைப்படுகிறது. ஒட்டுவகைகளோ ஏக்கருக்கு இரண்டு கிலோ மட்டுமே போதுமானது. இவ்வாறு ஏக்கர் ஒன்றுக்கு மூவாயிரம் ரூபாய் வரை செலவு செய்து, மூன்று மாதங்களில் 13 ஆயிரம் ரூபாய் மதிப்பில் சாகுபடி செய்ய முடிகிறது.

இதனால் நிலக்கடலை, உளுந்து ஆகியவற்றை ஒப்பிடுகையில் அதிக லாபம் கிடைக்கும் பயிராக சூரியகாந்தி மாறியது. தரிசாக கிடந்த நிலமும், பதப்படுத்தப்பட்டு சூரியகாந்தி விளையும் பூமியாக மாற்றப்பட்டுள்ளது. மார்க்கெட்டில் சூரியகாந்திக்கு ஏற்பட்டுள்ள விலை ஏற்றத்தை கண்ட விவசாயிகள் ஆர்வமுடன் பயிர் செய்து, விளைபொருளை மார்க்கெட்டுக்கு கொண்டுவந்தால், திடீரென கடுமையான விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கரூர் மாவட்ட உற்பத்தி கொண்டு செல்லப்படும் ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோயில் மார்க்கெட் நிலவரப்படி கிலோ ஒன்றுக்கு தற்போது 13 ரூபாய் அளிக்கப்படுவது விவசாயிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கடந்த 2006ல் குறைந்தபட்சம் 22 ரூபாய் வரை சூரியகாந்திக்கு விலை கிடைத்தது.

அதே சமயம், மார்க்கெட்டில் சூரியகாந்தி எண்ணெய்க்கு குறைந்தபட்சம் 60 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விற்கப்படுகிறது. எண்ணெய் உற்பத்திக்கான கச்சா பொருளான சூரியகாந்தி விதைக்கு மட்டும் அடிமட்டமான விலை நிர்ணயிக்கப்படுகிறது. இதற்கு இடைத்தரகர்களின் ஆதிக்கமே காரணம் என்று விவசாயிகள் பொருமுகின்றனர்.

இதுகுறித்து வேளாண் துறை அலுவலர்கள் கூறியதாவது: கரூர் மாவட்டத்தில் கடந்த காலங்களில் சூரியகாந்தி சாகுபடி பரப்பளவும் அதிகரித்து, உற்பத்தியும் அதிகரித்துள்ளது. நடப்பாண்டு மார்ச்சுக்குள் 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் சூரியகாந்தி பயிரிட இலக்கு நிர்ணயித்து பணி துவங்கப்பட்டது. ஆனால், மார்க்கெட்டில் சூரியகாந்திக்கு நிலையான விலை இல்லாத காரணத்தினால், இதுவரை நான்காயிரத்து 800 ஹெக்டேர் மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. அதிகரித்துள்ள சூரியகாந்த விதை உற்பத்திகாரணமாக, விலை குறைவு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் எண்ணெய் விலை குறையவில்லை. இடைத்தரகர்களிடம் சிக்குவதை தவிர்த்து விவசாயிகள் அரசின் ஒழுங்குமுறை விற்பனைகூடத்தை சரியாக பயன்படுத்தினால், இந்த அளவு நஷ்டத்தில் சிக்குவதை தவிர்க்கலாம். இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

### நிலக்கடலையில் பூச்சித்தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

மதுரை:நிலக்கடலையில் பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறையை கடைபிடிக்க வேண்டும்.மதுரை மாவட்டத்தில் 4600 ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்யப் பட்டுள்ளது. இதில் சாறு உறிஞ்சும் பூச்சிகள், இலை உண்ணும் பூச்சிகள், காய்களை தாக்கும் பூச்சிகள் ஏற்படுவதால் மகசூல் பாதிக்கிறது. ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறையை கடைபிடித்தால் அதிக மகசூல் பெறலாம். இலையின் அடிப்பகுதியில் மஞ்சள் நிறத்தில் மிகச்சிறிய இலைப்பேனும், அதன் குஞ்சுகளும் சாறை உறிஞ்சி சேதம் விளைவிக்கும். இலைமொட்டு கருகல் நோயை பரப்புகின்றன. அசுவினி கருப்பு நிறத்தில் இளம் தளிர்களில் இருந்து சாறை உறிஞ்சி பாதிப்பை ஏற்படுத்தும். பச்சை தத்துப்பூச்சி தாக்குதலால், இலையின் விளிம்பில் மஞ்சள் நிற மாற்றம் காணப்படும். சுருள்பூச்சியின்

புழு ஆரம்பத்தில் இலையின் ஊடே துளையிட்டு, அதற்குள் வளர்ந்து இலைகளை சுருட்டி பச்சையத்தை சுரண்டி உண்ணும். வேர்ப்புழு தாக்கிய செடிகள் ஆங்காங்கே திடீரென காய்ந்து விடும்.

காய்த்துளைப்பான் காய்களில் சிறிய துவாரமிட்டு பருப்பை உண்டு பாதிப்பை ஏற்படுத்தும்.பாதுகாப்பு முறைகள்: கோடை உழவு செய்து கம்பளி பூச்சி கூண்டு புழுக்களை அழிக்க வேண்டும். சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்த வேண்டும். நோயை கட்டுப்படுத்த டிரைகோடெர்மா விரிடி ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். புரடீனியாவை கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணி விட வேண்டும். விளக்கு பொறி, சொக்கப்பானை வைத்து தாய் அந்துப்பூச்சிகளை அழிக்கலாம். முட்டை குவியல்களையும், இளம்புழுக்களையும் கையால் பொறுக்கி அழிக்கலாம். வேம்பு சார்ந்த அசடிராக்டின் மருந்தை ஏக்கருக்கு ஒருலிட்டர் தெளிக்கலாம், என விவசாயத்துறை இணை இயக்குனர் சங்கரலிங்கம் தெரிவித்துள்ளார்.

### விவசாயிகளுக்கான தொழில் நுட்பவிழாநாளை துவங்குகிறது

மதுரை:மதுரை விவசாயக் கல்லூரி, வேளாண் அறிவியல் மையம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் சார்பில், விவசாயிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சி தரும் விழா, விவசாயக் கல்லூரியில் நாளை துவங்கி மார்ச் 10 வரை நடக்கிறது.வேளாண் தொழில் முனைவோருக்கான சிறப்பு பயிற்சிகள், செம்மை நெல் சாகுபடி விளக்கம், துல்லிய பண்ணை சாகுபடி, பண்ணை இயந்திரமயமாக்குதல், விளைபொருட்களை சந்தைபடுத்துதல், மதிப்பூட்டப்பட்ட பொருட்களை தயாரித்தல் ஆகிய தலைப்புகளில் பல்வேறு பேராசிரியர்கள் கருத்தரங்க அமர்வுகளில் விளக்கம் தருகின்றனர்.விவசாயிகள் பங்கேற்று பயனடையுமாறு, கல்லூரி முதல்வர் வைரவன் தெரிவித்து உள்ளார்.

### சிவகங்கையில் காய்கறி விலை குறைவு நிலையான இடத்தில் பருப்பு விலை

சிவகங்கை:வாரச்சந்தைக்கு கடந்த சில வாரங்களாக காய்கறிகள் வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறைந்துள்ளது. பயறு, பருப்பு விலைகளில் மாற்றம் இல்லை.சிவகங்கை வாரச்சந்தை நிலவரம்:கடந்த சில வாரங்களுக்கு முன் 15 ரூபாய்க்கு விற்ற கத்தரி-10 ரூபாய், 20 க்கு விற்ற வெண்டை-16, 20 க்கு விற்ற பாகற்காய்-16, 40 க்குவிற்ற முருங்கை பீன்ஸ்- 35, 15 க்கு விற்ற கேரட்-10, 16 க்கு விற்ற முள்ளங்கி-10, 16 க்கு விற்ற உருளை-14, 10 க்கு விற்ற முட்டை கோஸ்-8, 10 க்கு விற்ற தக்காளி-8, கருணைக்கிழங்கு-24, இஞ்சி-60, 20 க்கு விற்ற அவரை-16, 60 க்கு விற்ற பட்டர் பீன்ஸ்-40, 16 க்கு விற்ற சின்ன வெங்காயம்-12, 12 க்கு விற்ற பெல்லாரி-14, காலி பிளவர்-15, 30 க்கு விற்ற சேணை-28, 32 க்கு விற்ற சேம்பு-30, 16 க்கு விற்ற பச்சை மிளகாய்-14, 16 க்கு விற்ற பீட்ரூட்-10, சவ்சவ்-10, சோயாபீன்ஸ்-40, எலுமிச்சை-35, பீர்க்கை-20, பூசணி-8, மொச்சை-40, நூக்கல் -12, முருங்கை -35, பீர்க்கை -20 ரூபாய்க்கும் விற்றது.பழங்கள் (கிலோ):ஆப்பிள்-120, இரண்டாவது ரகம்-100, மாதுளை-60, இரண்டாவது ரகம்-40, சாத்துக்குடி-40, சப்போட்டா-15, கொய்யா -20, அன்னாசி-35 ரூபாய்க்கும் விற்றது.பயறு, பருப்பு விலை:வெளிமார்க்கெட்டில் மொத்த விலையில் மாற்றம் ஏற்பட்ட போதிலும், சில்லரை விலையில் மாற்றம் ஏற்படவில்லை. கடந்த வாரம் 78 ரூபாய்க்கு விற்ற துவரம் பருப்பு, நேற்று -76 க்கு விற்றது. தட்டைபயறு -58, கடலை பருப்பு-56, உளுந்தம் பருப்பு- 88, கொண்டக்கடலை-38, 30 க்கு விற்ற பச்சை பட்டாணி-32, வெள்ளை-30, மொச்சை-58 விற்றது. கொண்டக்கடலை- 40, பாசிப்பருப்பு- 80, மொச்சை- 40, 60 க்கு விற்ற மல்லி- 65, மஞ்சள்- 95 க்கு விற்றது. 30 க்கு விற்ற புளி- 35, வத்தல் 65-க்கு விற்றது. 120 க்கு விற்ற மலைப்பூண்டு- 100, சாதா பூண்டு-80, சோம்பு-120, 160 க்கு விற்ற சீரகம்-170, கடுகு-180

க்கும் விற்றது.எண்ணெய் (கிலோ):நல்லெண்ணெய்-90, கடலை எண்ணெய் -65, தேங்காய் எண்ணெய் -80, பாமாயில் -45 ரூபாய்க்கும் விற்றது.

### பயறுவகை பயிர்களில் அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு அலுவலர் ஆலோசனை

திருவிடைமருதூர்: பயறு வகை பயிர்களில் அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு திருவிடைமருதூர் வேளாண் உதவி இயக்குனர் ரவீந்திரன் ஆலோசனை கூறியுள்ளார். திருவிடைமருதூர் பகுதியில் தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள பயறுவகை பயிர்கள் பூக்கும் தருணம் முதல் காய் பிடிக்கும் தருணங்களில் உள்ளது. இலைவழி உரமிட்டு மகசூலை அதிகரிக்க செய்யலாம். இலைவழி உரமிடல்: உளுந்து, பயறு பயிர்களில் நல்ல மகசூல் பெற 2 சத டி.ஏ.பி. கரைசல் தெளிக்க வேண்டும். இதற்கு 4 கிலோ டி.ஏ.பி. உரத்தை 10 லிட்டர் தண்ணீரில் முதல்நாளே ஊற வைத்து மறுநாள் வடிகட்ட வேண்டும். இந்தக் கரைசலுடன் 190 லிட்டர் தண்ணீரைக் கலந்து 200 மில்லி ஒட்டும் திரவத்தையும் கலந்து கைத்தெளிப்பான் மூலம் விதைத்த 30-35ம் நாள் பயிர் பூக்கும் சமயம் மாலை வேளையில் தெளிக்க வேண்டும். 15 நாட்கள் கழித்து மறுமுறை தெளிக்க வேண்டும். வேளாண் துறை மூலம் டி.ஏ.பி. உரம் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் வழங்கப்படுகிறது. சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் உதவி அலுவலரை அணுகலாம். இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்கல்

மண்ணச்சநல்லூர்: மண்ணச்சநல்லூரில் நிலக்கடலை சாகுபடி செய்த விவசாயிகளுக்கு 50 சதவீத மான்ய விலையில் வேளான் உரங்கள் வழங்கப்பட்டது. தேசிய வேளான் திட்டத்தின் கீழ் நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு 2 ஹெக்டேருக்கு தேவையான டி.ஏ.பி 10 கிலோ, அமோனியம் சல்பேட் 4 கிலோ மற்றும் போரக்ஸ் 2 கிலோ ஆகிய உரங்கள் 50% மான்ய விலையில் 30 விவசாயிகளுக்கு வேளாண் உதவி இயக்குநர் சிவசங்கரன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ரங்கராஜன், மனேகரன் உட்பட வேளான் அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். இத்திட்டத்தின் கீழ் இப்பகுதியில் 325 பேர் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### அறுவடை பின்செய் நேர்த்தி பயிற்சி

திருநெல்வேலி :முனைஞ்சிப்பட்டியில் விவசாயிகளுக்கு அறுவடை பின்செய் நேர்த்தி பயிற்சி நடந்தது.தமிழ்நாடு நீர்வள திட்டத்தின் கீழ் கருமேனியாறு உபவடிநில பகுதி முனைஞ்சிப்பட்டி, கூந்தகுளம், பிள்ளையார்குளம், ராமகிருஷ்ணபுரம், கோடகன்குளம் மற்றும் சுற்றுப்புற கிராம விவசாயிகளுக்கு அறுவடை பின்செய் நேர்த்தி பயிற்சி நடந்தது.முனைஞ்சிப்பட்டி பஞ்., துவக்கப் பள்ளியில் நடந்த பயிற்சிக்கு பஞ்.,தலைவர் சரோஜா தங்கராஜ் தலைமை வகித்தார். நெல்லை வேளாண் வணிகத்துறை இயக்குநர் தங்கசாமி பாண்டியன் முன்னிலை வகித்தார். ஏற்பாடுகளை ஆலங்குளம் வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) லக்குமணன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் ஜபருல்லா செய்திருந்தனர்.

### மண்புழு உர கூடத்தில் தோட்டக்கலை துறையினர் ஆய்வு

தென்காசி :வாசுதேவநல்லூர் மண்புழு உர கூடத்தில் வேளாண்மை கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் தோட்டக்கலை துறையினர் ஆய்வு செய்தனர். வாசுதேவநல்லூரில் தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் கீழ் போஸ்ராஜா என்பவர் மண்புழு உர கூடம் அமைத்துள்ளார். இந்த உர கூடத்தை கிள்ளிகுளம் வோண்மை கல்லூரி தோட்டக்கலை துறை பேராசிரியர் விஜீவன் ஹாரீஸ், சுற்றுப்புற சூழல் அறிவியல் துறை உதவி பேராசிரியர் ரமேஷ், நெல்லை தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜாசிங், வாசுதேவநல்லூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் முருகானந்தம், தோட்டக்கலை துணை அலுவலர் மாரியப்பன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். தோட்டக்கலை துறை சார்பில் அமைக்கப்பட்ட இந்த மண்புழு உர கூடத்திற்கு 30 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என வாசுதேவநல்லூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் மாரியப்பன் தெரிவித்தார்.

### விதை கிராம பயிற்சி முகாம்

சேத்துப்பட்டு: இடையன்குளத்தூர் கிராமத்தில் விதை கிராம பயிற்சி முகாம் நடந்தது.சேத்துப்பட்டு உதவி வேளாண்மை அலுவலகம் சார்பில், இடையன்குளத்தூர் கிராமத்தில் விதை கிராம பயிற்சி திட்டத்தின் மூலம் சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் அக்கண்டராஜ் தலைமை வகித்தார். பஞ்., தலைவர் கோட்டீஸ்வரி பெரியண்ணன் முன்னிலை வகித்தார்.விவசாயிகளுக்கு விதை நேர்த்தி பயிற்சியும், செம்மை நெல் சாகுபடி, பயிர் பாதுகாப்பு, பயிர்களுக்கு மருந்து தெளிப்பது குறித்து விதைச்சான்று அலுவலர் கோபாலகிருஷ்ணன் பயிற்சி அளித்தார்.முகாமில், சேத்துப்பட்டு பகுதியை சேர்ந்த 50 விவசாயிகள் கலந்து கொண்டனர். இதில், உதவி விதை அலுவலர் ராஜாராம், வேளாண் உதவி அலுவலர்கள் முருகன், பாபு, குப்புசாமி, நடராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு பைப் வினியோகம்

வாலாஜாபாத் : வாலாஜாபாத் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு பி.வி.சி.,பைப்புகள் வழங்கப்படுகின்றன. கோடைகாலம் துவங்கி உள்ளதால், கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், விவசாயிகள் விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்காமல் தவித்து வருகின்றனர்.விவசாயிகள் நலன் கருதி கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகளை ஆழப்படுத்த மானிய விலையில் பி.வி.சி., பைப்புகள் வழங்க அரசு முடிவு செய்தது.அதன்படி விவசாயிகள் வைத்துள்ள மோட்டார் அளவிற்கேற்ப 4 ,3 , 2 இன்ச் அளவுகளில் பைப்புகள் 50 சதவீதம் மானியத்தில் வாலாஜாபாத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் வழங்கப்படுகிறது.இதைப் பயன்படுத்தி விவசாயிகள் பயன்பெற வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குனர் பழனிவேலு தெரிவித்துள்ளார்.

### ஏரிபாசன விவசாயிகளுக்கு மானியத்தில் இடுபொருட்கள்

வாலாஜாபேட்டை:ஏரிபாசன விவசாயிகளுக்கு காய்கறி விதை மற்றும் அற்கான இடுபொருட்களை முழு மானியத்தில் வழங்கப்பட உள்ளதாக வாலாஜா வேளாண்மை விரிவாக்க மைய தோட்டக்கலை உதவி இயக்குனர் ஈப்பன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு:

விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறையின் மூலம் மா ஒட்டுக்கன்றுகள், மற் றும் அதை நடவு செயவதற்கேற்ற உர மூட்டைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், பூஞ்சான் மருந்துகள் இலவசமாக வழங்க உள்ளோம். எனவே விவசாயிகள் அதற் கேற்ற ஆவணங்களான கணினி சிட்டா, அடங்கல், புகைப்படம், குடும்ப அட் டை நகல், வங்கி கணக்கு பாஸ் புத்தக நகல், மண் மற்றும் நீர் பரிசோதனை அறிக்கை போன்றவற்றுடன் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் 65 சதவீத மானியத்தில் ஒரு எக்டேரில் சொட்டுநீர் பாசனமும் அமைத்துக்கொள்ளலாம். நீர் வள, நிலவளத்திட்டத்தின் மூலம் ஏரிபாசன விவசாயிகளுக்கு மட்டும் காய்கறி விதைகள் மற்றும் அதற்கேற்ற இடு பொருட்கள் இலவசமாக (முழு மானியத்தில்) வழங்கப்பட உள்ளது. இதுபற்றி விவசாயிகள் 94440 10638 என்ற செல் போனில் தொடர்புகொண்டு சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

### நேரடி நெல் கொள்முதல் நிலைய திறப்பு விழா

விழுப்புரம்:திருநாவலூர் உழவர் பணி கூட்டுறவு சங்கத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலைய துவக்க விழா நடந்தது.திருக்கோவிலூர் சரக துணை பதிவாளர் நடுக் காட்டு ராஜா நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை துவக்கி வைத்தார். சங்க தனி அலுவலர் சதாசிவம், கள அலுவலர் சிவக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.மேலும் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 25க்கும் மேற்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலை யங்களில் நெல்லை விற் பனை செய்து பயன்பெறுமாறு மண்டல இணை பதிவாளர் ரேணுகாம்பாள் கேட்டுக் கொண் டுள்ளார்.

### புதிய இலைவழி உரம் அறிமுகம்

திண்டிவனம்:திண்டிவனத்தில் புதிய இலை வழி உரம் அறிமுகப்படுத்தப்பட்டது.ஈ.ஐ.டி., பாரி கம்பெனி இந்த உரத்தை அறிமுகப்படுத்தியது. திண்டிவனம் பாண்டியன் உர டிப்போவில் ஈ.ஐ.டி., பாரி கம்பெனி சார்பில் நடந்த விழாவில் கொரமண்டல் நிறுவன தலைவர் நாராயணன் வெள்ளையன் அறிமுகப்படுத்தினார். இந்த உரம் நெல் மற்றும் காய்கறிகளுக்கு ஒரு கிலோ பயன்படுத்தினால் 50 கிலோ உரத்திற்கு சமமான பலனை அளிக்கும் என நாராயணன் வெள்ளையன் தெரிவித்தார்.நிகழ்ச்சியில் ராமச்சந்திரன் வரவேற்றார். நிறுவன திருச்சி மண்டல மேலா ளர் பாலகிருஷ்ணன், துணை மேலாளர் சீனுவாசன், விழுப்புரம் மேலா ளர் சங்கர், கள அலுவலர் பாலகிருஷ்ணன், விவசாயிகள் வேம்பூண்டி குப்புசாமி, முருகன், கடவம் பாக்கம் மணி, ஊரல் ஆறுமுகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.இந்த உரம் பயன்படுத்திய ஊரல் குப் புசாமியின் வயலை நிறுவனத்தினர் பார்வையிட்டனர்.

### ஏலத்துக்கு பருத்தி வரத்து அதிகரிப்பு: டி.சி.எச்., விலை தொடர்ந்து உயர்வு

அவிநாசி: அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்துக்கு வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. டி.சி.எச்., ரகத்தின் விலை ரூ.4,780 ஆனதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத் தில் நேற்று நடந்த பருத்தி ஏலத் துக்கு 6,700 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 800 மூட்டை அதிகம். வரத்து அதிகரித்துள்ள நிலையில், அனைத்து ரகங்களும் நல்ல விலைக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். நேற்றைய ஏலத்தில் டி.சி.எச்., ரகம் இந்த சீசனிலேயே அதிகபட்ச விலையாக ரூ.4,780க்கு ஏலம் போனது.இந்த வார ஏலத்தில்

அனைத்து ரக பருத்தி விலை விபரம் (குவிண்டாலுக்கு) வருமாறு:எல்.ஆர்.ஏ., ரூ.3,050 முதல் ரூ.3,300 வரை, டி.சி.எச்., ரூ.4,300 முதல் ரூ.4,780 வரை, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ரூ.3,100 முதல் ரூ.3,500 வரை, மட்டம் ரூ.1,750 முதல் ரூ.1,950 வரை.பருத்தி ஏலம் குறித்து கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது:நேற்றைய ஏலத்துக்கு வரத்து நன்றாக அதிகரித்திருந்தது.

இந்த சீசனில் நேற்று டி.சி.எச்., ரகம் அதிகபட்சமாக ரூ.4,780 வரை ஏலத்தில் எடுக்கப்பட்டது.பென்னாகரம், மணப்பாறை, திண்டுக்கல், கோவில்பட்டி, திருப் பத்தூர், திங்களூர், போச்சம்பள்ளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 360 விவசாயிகள், அன்னூர், கோவை, திருப்பூர், அவிநாசி பகுதிகளைச் சேர்ந்த 25 வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்றனர்.வரத்து அதிகரித்ததால் ஏலம் இன்றும் நடக்கிறது. ரூ.80 லட்சம் வரை இந்த வாரம் வர்த்தகம் நடந் தது. வரும் வாரங்களில் டி.சி.எச்., விலை ரூ.5 ஆயிரத்தை தொடும் என்று எதிர்பார்க்கிறோம், என்றார்.

### புழு வளர்ப்பு மனை தட்பவெப்பம் முறையாக பராமரிக்க 'அட்வைஸ்'

உடுமலை:"கோடை காலத்தில் தரமான பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்ய, புழு வளர்ப்பு மனைகளில் தட்பவெப்ப நிலையை முறையாக பராமரிக்க வேண்டும்' என, விஞ்ஞானி செல்வராஜ் பேசினார்.

உடுமலை அருகே உள்ள சின்னவீரம்பட்டியில் தொகுப்பு வளர்ச்சி ஊக்குவிப்பு திட்டத்தில், வெண்பட்டு விவசாயிகள்விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. பட்டு வளர்ச்சி துறை இளநிலை ஆய்வாளர் அழகுராமலிங்கம் வரவேற்றார். உதவி ஆய்வாளர் சண்முகசுந்தரம் திட்ட விளக்கம் குறித்து பேசினார். மண் புழு மற்றும் இயற்கை வேளாண்மை குறித்து சத்தியமங்கலம் விவசாயி ரவி, விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார்.கோடை காலத்தில் பட்டு வளர்ப்பில் பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி செல்வராஜ் பேசியதாவது:கோடை காலத்தில் மல்பெரி செடி வளர்ப்பு மற்றும் புழு வளர்ப்பு மனைகளில் தட்பவெப்பம் குறித்து கூடுதல் கவனம் செலுத்தினால், தரமான பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்யலாம். வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், மல்பெரி செடிகளில் தூக்ரா நோய் தாக்குதல் ஏற்படும் வாய்ப்புள்ளது. தூக்ரா மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த பூச்சி மருந்து தெளித்தல், உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளை பின்பற்றலாம்.உயிரியல் கட்டுப்பாட்டு முறையில், கிரிப்டோ - லோமஸ் மாண்டிசோரி என்ற பொறி வண்டை ஏக்கருக்கு 250 அல்லது ஸ்கினஸ் காக்சி ஒரா ஏக்கருக்கு 500 வண்டுகள் வீதம் தோட்டத்தில் விட வேண்டும். ஒரு லிட்டருக்கு ரோகார் 3.3 எம்.எல்., தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும்.

இலைகளுக்கு ஸ்பிரேயர் மூலம் தண்ணீர் தெளிக்கலாம்.புழு வளர்ப்பு மனைகளில் தட்பவெப்ப நிலையை பராமரிக்க வேண்டும். மனையை சுற்றிலும் பந்தல் அமைத்து அவ்வப்போது தண்ணீர் தெளிக்கலாம். உள்பகுதியில் பானைகளில் தண்ணீர் நிரப்பி தொங்க விட்டால், வெப்பம் குறைய வாய்ப்புள்ளது.புழுக்களுக்கு உணவாக அளிக்கும் மல்பெரி இலைகள் மீதும் தண்ணீர் தெளித்து மனையினுள் வைக்க வேண்டும். இந்த சீசனில் பால்பூச்சி (கிராஸரி) நோய் பரவும் வாய்ப்புள்ளது. நோய் தாக்குதல் குறித்த சந்தேகங்களுக்கு விவசாயிகள் மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையத்தையும், பட்டு வளர்ச்சி துறை கள அலுவலர்களையும் அணுகலாம். தரத்துடன் கூடிய அதிக அறுவடை என்ற அடிப்படையில் விவசாயிகள் பட்டு உற்பத்தி தொழிலை மேற்கொள்ள வேண்டும், என்றார்.

**உள்ளூர் சந்தையில் சீராக இருக்கும் அரிசி விலை : தானியங்கள் விலை உயர்கிறது**

உடுமலை : வரத்து அதிகரித்ததால், உள்ளூர் சந்தையில் சில வாரங்களுக்கு முன் குறைந்த அரிசி விலை, நிலையாக உள்ளது. அறுவடை சீசனிலும் வரத்து இல்லாததால், தானியங் களின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.உடுமலை பகுதிக்கு அரிசி ரகங்கள் கர்நாடகா, காரைக்குடி, காங்கயம் பகுதிகளில் இருந்து வரத்து உள்ளது.

டிசம்பரில் வெளிமாநில மற்றும் உள்ளூர் வரத்து குறைந்து அரிசி விலை வேகமாக உயர்ந்தது. நெல் சாகுபடியில் தை சீசன் அறுவடை துவங்கியதும், உள்ளூர் சந்தைக்கு வரத்து அதிகரித்து விலை குறைந்தது. கர்நாடகாவில் இருந்து ராஜபோகம், பி.பி.டி., ஆகிய ரகங்களும், அதிசய பொன்னி, ஏ.டி.டி., 36, வெள்ளை பொன்னி உட்பட ரகங்கள் காரைக்குடி, காங்கயம், ஆனைமலை பகுதிகளில் இருந்து விற்பனைக்காக வாங்கி வரப்படுகிறது.உள்ளூர் சந்தையில், கடந்த டிசம்பரில் 25 கிலோ மூட்டை ராஜபோகம் அரிசி 1,020 ரூபாய்க்கும், பி.பி.டி., 850 ரூபாய், அதிசய பொன்னி 550, வெள்ளை பொன்னி 1,040 ரூபாய்க்கும் விற் கப்பட்டது. வரத்து அதிகரித்ததும், அனைத்து ரக அரிசியின் விலையும் திடீரென குறைந்தது.

25 கிலோ மூட்டைக்கு 200 ரூபாயில் இருந்து 400 ரூபாய் வரை விலை சரிவு இருந்தது. தற்போது, உள்ளூர் சந்தையில் 25 கிலோ மூட்டை ராஜபோகம் 820 ரூபாயாகவும், பி.பி.டி., 650., வெள்ளை பொன்னி 850 ரூபாயாகவும் குறைந்தது. அதிசய பொன்னியின் விலையும் 300 ரூபாய் வரை குறைந்துள்ளது.வெளிமாநில மற்றும் மாவட்ட வரத்து உடுமலைக்கு சீராகவே உள்ளது. இந்த விலை கடந்த சில வாரங்களாக எந்த மாற்றமும் இல்லாமல் நிலையாக உள்ளது. அடுத்த நான்கு மாதங்களுக்கு அரிசி விலையில் பெரிய மாற்றம் இருக்காது என சில்லறை வியாபாரிகள் தெரிவித்தனர்.தானியங்கள் விலை: தானியங்கள் விலை ஒரு மாதமாக நிலையில்லாமல் ஏற்ற இறக்கத்தில் உள்ளது. உடுமலை பகுதியில் தானியங்கள் சாகுபடியில் போதிய விளைச்சல் இல்லாததால் பெரும்பாலும் வெளிமாவட்டங் களில் இருந்தே வரத்து உள்ளது.

வறுகடலை கிலோ 46 ரூபாயில் இருந்து 50 ரூபாயாகவும், துவரம் பருப்பு 68 ரூபாயில் இருந்து 80க்கும், உளுத்தம்பருப்பு (பர்மா) கிலோவுக்கு 12 ரூபாய் உயர்ந்து 80 ரூபாய்க்கும், தட்டை பயறு-44 கொள்ளு-46 ரூபாயாகவும் விற்பனையாகிறது.

இந்த பயறு ரகங்கள் அனைத்தும் சில மாதங்களாக தொடர்ந்து விலை அதிகரித்து வருகிறது.கொத்தமல்லி வரத்து குறைவாக உள்ளதால், ஒரே மாதத்தில் 14 ரூபாய் உயர்ந்து 64 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வரமிளகு விலை 60 ரூபாயில் இருந்து 80 ரூபாயாக உயர்ந்துள்ளது.

பாசிப்பயறு விலை மட்டும் சிறிது குறைந்து கிலோ 68 ரூபாய்க்கு விற்கப் படுகிறது. எண்ணெய் வகைகளின் விலையில், சில மாதங்களாக மாற்றம் இல்லை.சர்க்கரை விலை 41 ரூபாயில் இருந்து 35.50 ரூபாயாக குறைந்துள்ளது. தானிய சாகுபடி பரப்பு குறைந்துள்ளதால், அறுவடை சீசனிலும் விலை குறைவதில்லை என வியாபாரிகள் தெரிவித்தனர்.

*ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் காபி ஏற்றுமதி 43% வளர்ச்சி*

*நடப்பு 2010–ஆம் ஆண்டின் ஜனவரி மற்றும் பிப்ரவரி ஆகிய இரு மாதங்களில், நாட்டின் காபி ஏற்றுமதி 43 சதவீதம் அதிகரித்து 38,734 டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது. மதிப்பின் அடிப்படையில், இவ்விரு மாதங்களிலும் காபி ஏற்றுமதி 48 சதவீதம் உயர்ந்து ரூ.434.50 கோடியாக அதிகரித்துள்ளது என காபி வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*
*கடந்த 2009–ஆம் ஆண்டின் இதே மாதங்களில் காபி ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 27,000 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில் ரூ.290 கோடியாகவும் இருந்தது.*

*உற்பத்தி*

*உலக அளவில் காபி உற்பத்தியில் இந்தியா ஆறாவது மிகப் பெரிய நாடாக திகழ்கிறது.*
*காபி ஏற்றுமதி குறித்து காபி வாரியத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது, “உள்நாட்டில் காபி உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்த நிலையில், வெளிநாடுகளில் காபிக்கான தேவைப்பாடு அதிகரித்ததையடுத்து, இவ்விரு மாதங்களிலும் இதன் ஏற்றுமதி சிறப்பான அளவில் மேம்பட்டுள்ளது” என்று தெரிவித்தார்.*
*நடப்பு காபி பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) கடும் மழையால் காபி உற்பத்தியில் பாதிப்பு இருக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இப்பருவத்தில் நாட்டின் காபி உற்பத்தி 2.89 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, கடந்த காபி பருவத்தில் 2.62 லட்சம் டன்னாக இருந்தது.*

*இறக்குமதி*

*இந்தியாவின் காபி விலை நிலையாக உள்ளதால், பல வெளிநாடுகள், இங்கிருந்து காபியை இறக்குமதி செய்து கொள்ள ஆர்வம் காட்டி வருகின்றன. இவ்வகையில், இத்தாலி, ரஷ்ய கூட்டமைப்பு நாடுகள் மற்றும் ஜெர்மனி ஆகிய மூன்று நாடுகளில் இருந்து அதிக அளவில் காபி இறக்குமதி செய்து கொள்ளப்பட்டுள்ளது. இத்தாலி 7,463 டன்னையும், ரஷ்ய கூட்டமைப்பு நாடுகள் 5,609 டன்னையும், ஜெர்மனி 3,764 டன் காபியையும் இறக்குமதி செய்துள்ளன.*
*மொத்த காபி ஏற்றுமதியில் சுமார் 29,000 டன் காபியாகவும், மீதமுள்ள 9,726 டன் மறு ஏற்றுமதி அடிப்படையில் இன்ஸ்டென்ட் காபியாக ஏற்றுமதியாகி உள்ளது.*
*சி.சி.எல். புராடக்ட்ஸ் இந்தியா (4,936 டன்), நெஸ்லே இந்தியா (3,281 டன்), டாட்டா காபி (2,875 டன்) ஆகிய மூன்று நிறுவனங்கள், சென்ற ஜனவரி – பிப்ரவரி மாதங்களில் மிக அதிக அளவில் காபியை ஏற்றுமதி செய்துள்ளன.*

*அராபிகா*

*வெளிநாடுகளில், அராபிகா காபிக்கு அதிக வரவேற்பு உள்ளது. இதனால், ரோபஸ்டா வகை காபியை விட, அராபிகா வகை காபி ஏற்றுமதி 48 சதவீதம் அதிகரித்து 11,083 டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டு இதே மாதங்களில் 7,457 டன்னாக இருந்தது. இதே மாதங்களில், ரோபஸ்டா காபி ஏற்றுமதி 13,745 டன்னிலிருந்து 14,458 டன்னாக உயர்ந்துள்ளது.*

**தென்னை மரங்களுக்கும் காப்பீட்டு வசதி வருகிறது**

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*கொச்சி*

*தென்னை விவசாயிகளுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் தென்னை மரங்களுக்கும் காப்பீட்டு வசதியை ஏற்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இயற்கை சீற்றங்கள், பூச்சி தாக்குதல் மற்றும் நோய்க்கு எதிராக தென்னை மரங்களுக்கு இந்த பாதுகாப்பு அளிக்கப்படும்.*

*மாநில அரசுகள்*

*மாநில அரசுகளின் ஆதரவுடன் தேங்காய் மேம்பாட்டு வாரியமும், விவசாய காப்பீட்டு நிறுவனமும் இத்திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளன. தற்போது, நம் நாட்டில் தேங்காய் அதிகம் உற்பத்தியாகும் சில குறிப்பிட்ட பகுதிகளில், சோதனை அடிப்படையில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.*

*தென்னை மரம், விவசாயிகளுக்கு நிரந்தர வருவாய் அளிக்கும் பயிராக உள்ளது. எனினும் இன்று வரை தென்னை மரங்கள் பயிர்க் காப்பீட்டு திட்டத்தில் இணைக்கப்படவில்லை. இந்நிலையில் கேரளா மற்றும் கோவா மாநில அரசுகள் தென்னைக்கு காப்பீட்டு வசதி அளிக்கும் திட்டத்துக்கு நிர்வாக அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளதாக தேங்காய் மேம்பாட்டு வாரியத்தின் தலைமை அதிகாரி தாமஸ் மேத்யூ தெரிவித்தார்.*

*இந்த காப்பீட்டு வசதியைப் பெறுவதற்கு, ஒரு விவசாயியிடம் மகசூல் தரக்கூடிய தென்னை மரங்கள் குறைந்தபட்சம் 10 இருக்க வேண்டும். இந்தக காப்பீட்டு வசதி, 4 முதல் 15 ஆண்டுகள் ஆன மரங்கள் மற்றும் 16 முதல் 60 ஆண்டு வயதான மரங்கள் என்ற இரண்டு பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.*

*முதல் பிரிவில், ஒரு தென்னை மரத்துக்கு, ரூ.600–க்கு காப்பீடு செய்து கொண்டால் ரூ.4.69–ஐ பிரிமியமாக செலுத்த வேண்டும். இரண்டாவது பிரிவில், ஒரு தென்னைக்கு ரூ.1,150–க்கு காப்பீடு செய்தால் அதற்கான பிரிமிய கட்டணம் ரூ.6.39–ஆக இருக்கும். பிரிமிய தொகையில் சேவைக் கட்டணமும் அடங்கும். பிரிமியத்தில் 50 சதவீதத்தை தேங்காய் மேம்பாட்டு வாரியமும், 25 சதவீதத்தை மாநில அரசும் ஏற்றுக் கொள்கின்றன.*

*தமிழ்நாடு*

*கேரளாவில் திருவனந்தபுரம், ஆலப்புழை, எர்ணாகுளம் மற்றும் கோழிக்கோடு ஆகிய மாவட்டங்களில் தென்னைக்கான காப்பீட்டுத் திட்டம் தற்போது அறிமுகம் செய்யப்பட உள்ளது. தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, ஒரிசா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலும் இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என தாமஸ் மேத்யூ கூறினார்.*

*அண்மையில் வெளிவந்த புள்ளிவிவரத்தின்படி, நாட்டின் தேங்காய் உற்பத்தியில் 7 சதவீதம் சரிவு ஏற்பட்டு அவற்றின் எண்ணிக்கை 1,474.30 கோடியாக குறைந்துள்ளது. இதில் கேரள மாநிலம் 564.10 தேங்காய் உற்பத்தி செய்து முதலிடத்திலும், தமிழ்நாடு 496.80 கோடி தேங்காய்களுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளன. எனினும் இரண்டு மாநிலங்களிலும் உற்பத்தி குறைந்து போயுள்ளது.*